*முக்கிய வார்த்தைகள்:*
*போதனை செய்*
*வழிகாட்டு*
*அணுகுதல்*
*அறிந்து கொள்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**04 செப்டம்பர் 2026 / 22 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1448**

**<u>இறைத்தூதுவத்துவ வழிகாட்டுதல்: விமர்சன சிந்தனையை ஏற்படுத்தி. ஞானத்தை வளர்த்தல்</u>**

**إِنَّ الْحَمْدَ لِلّٰهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّلَهُ، وَمَن يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَه إِلاَّ اللهُ وَحْدَهُ لاَشَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُه. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.**

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். இம்மையிலும் மறுமையிலும் நாம் மகிழ்ச்சியை அடைவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

ரசூலுல்லாஹ்[ஸல்] அவர்கள், அறிவு, ஞானம் மற்றும் கருணைச் சிந்தனையுடன் மனிதகுலத்திற்கு **வழிகாட்டும்** ஒரு **முன்மாதிரியான ஆசிரியராக** அனுப்பப்பட்டார்கள்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின்" அல்-ஜுமுஆ" எனும் அத்தியாயத்தின் 2-வது வசனத்தில் கூறுகிறான்:

هُوَ ٱلَّذِى بَعَثَ فِى ٱلْأُمِّيِّـۧنَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا۟ عَلَيْهِمْ ءَايَـٰتِهِۦ وَيُزَكِّيهِمْ
وَيُعَلِّمُهُمُ ٱلْكِتَـٰبَ وَٱلْحِكْمَةَ وَإِن كَانُوا۟ مِن قَبْلُ لَفِى ضَلَـٰلٍ مُّبِينٍ ٢

பொருள்: *"அவன்தான் [அல்லாஹ்], எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும்* ***கற்பிக்கும்*** *ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்; அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தார்கள்"*

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், மனித மனதையும் குணத்தையும் செதுக்கி, மேன்மைப்படுத்தும் கல்விப் புரட்சியை அறிமுகம் செய்தார்கள். தகவல் பெருக்கமும் செயற்கை நுண்ணறிவும் [AI] நிறைந்த இன்றைய காலகட்டத்தில், தகவல்களைப் பெறுவதென்பது நமது சவால் அல்ல; மாறாக, உண்மையைப் பொய்யிலிருந்து பிரித்தறிந்து, விஷயங்களை நேர்மையுடனும் பகுத்தறிவுடனும் மதிப்பிடக்கூடிய விமர்சன சிந்தனைகளை உருவாக்குவதே நமது சவாலாகும்.

இதனால்தான், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் கற்பித்தல் முறையானது, அதாவது, அவர்களின் **போதனை** மற்றும் **வழிகாட்டும் அணுகுமுறையானது**, **ஆசிரியர்களால்** மட்டுமல்லாமல் பெற்றோர்

களாலும் நமது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு **வழிகாட்டியாலும்** மீண்டும் நிலைநிறுத்தப்பட வேண்டும். இந்தக் கற்பித்தல் முறையின் சில பண்புகள் யாவை? என்பதை இங்கு நாம் தெரிந்து கொள்ள இருக்கின்றோம்.

**முதலாவதாக: ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் திறனாய்வுச் சிந்தனையை, அதாவது விமர்சனச் சிந்தனையை வளர்த்தார்கள்.**

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் அறிவைத் தூண்டும் வகையில் கற்பித்தார்கள். இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள் பின்வரும் ஹதீதைப் பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தனது தோழர்களிடம்: *"திவாலானவர் [Bankrupt] யார் என உங்களுக்குத் தெரியுமா?"* எனக் கேட்டார்கள். செல்வம் இல்லாதவர், செல்வத்தை இழந்தவர் எனத் தோழர்கள் பதிலளித்த போது, இறைத்தூதர்[ஸல்] அவர்கள், அத்தோழர்களின் பதிலையும் **புரிதலையும்** திருத்தினார்கள்; அதாவது, உண்மையான திவாலானவர் யார் என்றால், தான் பிறருக்குச் செய்த தீமைகளுக்கு ஈடாக, தனது சொந்த நற்செயல்களின் நன்மைகளை இழந்து விடுபவர் ஆவார்; நியாயத் தீர்ப்பு நாளில் அந்நற்செயல்களுடன் அவர் வருவார்; அப்போது அவர் யாருக்கெல்லாம் தீங்குகளைச் செய்தாரோ, அவர்களுக்கு அவரது நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படும்; அப்போது அவரிடம் எந்த நன்மையும் இருக்காது என்று விளக்கிக் கூறினார்கள்.

இந்தக் கற்பித்தல் முறையின் மூலம், மேலோட்டமானப் பார்வைக்கு அப்பால் பார்க்கவும், கூர்ந்து ஆராயவும், முடிவெடுப்பதற்கு முன் ஆழ்ந்து சிந்திக்கவும் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நமக்குக் **கற்றுத்** தருகிறார்கள்.

**இரண்டாவதாக: கற்பவரின் புரிதல் நிலைக்கு ஏற்ப கற்பித்தலாகும்.**

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள், மக்களின் **புரிந்து கொள்ளும் திறனுக்கு** ஏற்ப படிப்படியாக **வழிகாட்டுதலை** வழங்கினார்கள். அதே வகையில் தன் தோழர்களுக்குக் கல்வி புகட்டினார்கள். சய்யிதினா அலி [ரலி] அவர்கள்,

"மக்களின் **புரிந்து கொள்ளும் திறனுக்கு** ஏற்ப அவர்களிடம் பேசுங்கள்" என்று அறிவுரை வழங்கினார்கள். [இந்த ஹதீதை இமாம் புகாரி [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்.]

உண்மையையும் மார்க்கப் **போதனைகளையும்** எடுத்துரைப்பதற்குப் பொறுமையும், படிப்படியான **அணுகுமுறையும்** அவசியமாகும்; மற்றும் வற்புறுத்துதலோ, கடுமையானப் போக்கோ அல்லாமல் இதயத்தைத் தொடும் வார்த்தைகளும் தேவைப்படுகின்றன.

**மூன்றாவதாக: ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் மக்களின் உள்ளங்களைத் தொட்டார்கள்.**

பயனுள்ள கல்வியறிவானது, ஒன்று சேர்ந்து இணைந்துள்ள இதயங்களிலிருந்து தொடங்குகிறது. நபித்தோழர் சய்யிதினா முஆத் பின் ஜபல் [ரலி] அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் என் கையைப் பிடித்து : *"முஆதே! அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உண்மையாகவே உன்னை நேசிக்கின்றேன்"* என்று கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்]

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் தனது அறிவுரையை வழங்குவதற்கு முன்பாக, தனது அன்பை வெளிப்படுத்தினார்கள். நாம் யாருக்கு **வழிகாட்ட** வேண்டுமென விரும்புகின்றோமோ அவர்கள், தாங்கள் மதிக்கப் படுவதாகவும், அக்கறையுடன் கவனிக்கப்படுவதாகவும், பாரபட்சமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் உணரும் போது, திறந்த மனதுடன் அறிவுரைகளையும் கற்பித்தலையும் எளிதில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

**கல்வி கற்கும்** பொறுப்பு, பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் வகுப்பறைகளையும் கடந்ததாகும். அது நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதமாகும். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் முன்மாதிரியை **வழிகாட்டியாக** ஏற்றுக் கொண்டு, ஞானம், கருணைச் சிந்தனை மற்றும் சிறந்த **அணுகுமுறைகளுடன்** இந்தப் பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது குடும்பங்களையும் சமூகங்களையும் பேணி வளர்ப்பதில் நமக்கு ஞானத்தை வழங்குவானாக! மேலும் இவ்வுலகிலும் மறுமையிலும் நமது **ஆசிரியர்கள்** மற்றும் கல்வியாளர்கள் அனைவர் மீதும் தனது கருணை மழையைப் பொழிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ

العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.رَبَّنَا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.